1974 மார்ச் 22]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த அரசு அப்படிப்பட்ட முயற்சிகளைச் செய்ய இயலாது. வேறு மொழியை பயிற்சி மொழியாகவும், பாட மொழியாகவும், துணை மொழியாகவும் ஆக்குன்றை பொறுப்பு அந்த அந்த மாநிலங்களைச் சேர்ந்ததாகும். ஆங்கிலம் அல்லது இந்தி • இருக்க வேண்டுமென்றுதான் கூறப்பட்டிருக்கிறது. பெரும்பாலான இடங்களிலே, பெரும் தொழிற்சாலைகள், பணிமனைகள் நடைபெறுகின்ற இடங்களில் ஆங்கிலத்தைத்தான் பயிற்சிமொழியாகக் கொண்டிருக்கிறார்கள். இங்குள்ள 14 பள்ளிகளிலும் ஆங்கிலம்தான் மீடியம் ஆப் இன்ஸ்டர்க்ஷன் ஆக இருந்து வருகிறது.

Visual Education

* 554 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to include Visual Education in the syllabus of the schools; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (ஆ) தேவையான இடங்களில் திரைப்படம் காட்டுதல் முதலிய ஒளிக் கல்வி முறைகளைக் கையாண்டு பாடம் புகட்ட ஏற்கனவே உள்ள பள்ளிப் பாடத் திட்டத்திலேயே வகை செய்யப்பட்டு உள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : தற்பொழுது டெலிவிஷன் முறை வரப்போவதால், விஷுவல் எஜுகேஷனையும் அதோடு இணைத்து எல்லா பள்ளிகளிலும் வைக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே. அந்த தொலைக் காட்சி வந்ததற்குப் பிறகுதான் அதுபற்றி நடவடிக்கை எடுக்கவேண்டிவரும். அது வந்ததற்குப் பிறகு பயன்படுத்துகிற அளவுக்கு பல ஆசிரியர்களுக்கு இப்பொழுதே பயிற்சி தருகிற அளவுக்கு ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. இப்பொழுதே. 35 எம்.எம். துண்டு திரைப்படங்கள் போடுகின்ற பரஜக்டர்களும் 16 எம்.எம். ஒலி, ஒளிபோடுகின்ற பரஜக்டர்களும் பல்வேறு இடங்களிலும் செய்து வருகிறோம். தொலைக்காட்சி வந்ததற்குப் பிறகுதான் இவைபற்றிய திட்டங்கள் தீட்ட வேண்டிவரும்.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக மாணவர்களின் தரம் குறைந்திருக்கிறது என்ற நிலையை உணர்ந்ததற்குப் பின்னால் இப்படிப்பட்ட திரைக்காட்சிகளின் மூலம், ஒழுக்கத்தையும், நாணயத்தையும், தேசப் பொதுமக்கள் சேவைக்கு மதிப்பளிக்கக்கூடிய நடத்தையைப் போதிக்கக்கூடிய படங்களைத் தேர்ந்தெடுத்து, அல்லது அரசின் சார்பாக உருவாக்கி, அவைகளைக் காண்பிக்க அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சில உயர்நிலைப் பள்ளிகளிலே, இப்படிப்பட்ட புரஜக்டர்கள் எல்லாம் இருந்து வருகின்றன. அங்கே பள்ளி சம்பந்தமான பாடங்களைக் கற்பதற்கு, ஓரளவு தமிழகக் கல்வி இயக்கத்திலே சிலபல படங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. பள்ளி சம்பந்தமான படங்களை வெளிநாட்டுத் தூதரகங்கள் ஏராளமாக வைத்திருக்கிறார்கள். எந்த எந்த பள்ளி அவற்றைப் போட விரும்புகிறார்களோ, அவர்கள் கேட்டால், தூதரகங்கள் தரத் தயாராக இருக்கிறார்கள். பல பள்ளிகள் அவைகளைப் பெற்று, மாணவர்களுக்குக் காட்டி, பயன்படுத்தி வருகிறார்கள்.

Houses for Tourists in Ootacamund

* 555 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there is any proposal to construct rented houses in Ootacamund for tourists of middle income groups; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) உதகமண்டலத்தில் நடுத்தர வருமானத் தொகுதியைச் சேர்ந்த சுற்றுலா பயணிகளுக்காக வாடகை விடுகள் கட்டும் தனிப்பட்ட செயற்குறிப்பு ஏதும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் இல்லை. எனினும், உதகமண்டலத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சுற்றுலா மாளிகை ஒன்று உள்ளது. இதில் ரூ. 10.5 லட்சம் செலவில் 24 அறைகள் கொண்ட புதிய கட்டிடம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. இக் கட்டடம் நடுத்தர வருமானத் தொகுதியைச் சேர்ந்தவர்களுக்கு ஏற்றதாகவும் பயனுடையதாகவும் உள்ளது.